# வழிபாடு

வழிபாடு என்றால் வழிபடுதல், சரிபடுதல், முறைபடுதல், நெறிபடுதல் எனு பொருள் கொள்ளலாம். எதற்கு முறைபடுதல் அல்லது நெறிபடுதல் என்ற கேள்வி எழுமாயின் இறைநெறிக்குச் சரிபடுதல் அல்லது முறைபடுதல் என்பதே பதிலாய் அமையும். இறைநெறி என்பது அன்பு நெறி, அருள் நெறி, இன்பநிலை அடையும் நெறி. எனவே வழிபாடு என்பது நம்மை அன்புநெறிக்கு ஆளாக்கிக் கொண்டு இன்பநிலையை அடைவதுதான்.

வழிபாட்டில் இன்று இரண்டு வகையான வழிபாட்டினைக் காண்கின்றோம். முதலாவது பயன் கருதி செய்கின்ற வழிபாடு. இதனைக் காமிய வழிபாடு என்று கூறுவர். எடுத்துக்காட்டாக மழை வேண்டல், பணம் வேண்டல், பலம் வேண்டல், நினைத்த செயல் கைகூட வேண்டல் போன்றவற்றைக் கூறலாம். இத்தகைய வழிபாடு மேலும் உலக இன்ப நுகர்விற்கே நம்மை ஆளாக்குவதால் இத்தகைய வழிபாடு தவிர்க்கப் பட வேண்டும் என்று செந்தமிழர் நெறியான சித்தாந்த சைவம் கூறும். இதற்கு கரணியமாகக் கந்தபுராணத்திலே சூரபதுமன் இறைவனிடம் மூவுலகையும் ஆளும் பலம் கேட்டு வழிப்பட்டான். அவன் கேட்ட இப்பலமே பின்பு அவனுக்குத் "தான் எனது" என்ற ஆணவத்தைக் கூட்டி அவற் அழிவிற்குக் காரணமானது.

இறைவன் நாம் சொல்லாமலேயே எல்லாவற்றையும் தாமாக அறிபவராய் இருப்பதனால் நமக்கு வேண்டியவற்றை அறிந்து தாமே தருவார் என்று தமிழ்ச் சமயம் குறிப்பிடும். இதனைத்தான் தமிழ் வேதமான திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான், "வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று தெளிவுறக் குறிப்பிடுவார். இறைவனைத் தம் தோழனாகக் கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளோ தமது சுந்தரத் தமிழிலே, "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை, போகமும் திருவும் புணர்ப்பானை" என்று நயம்பட பாடுவார். இதனையேதான் வள்ளுவப் பேராசானும், "வகுத்தான் வகுத்த வழியல்லால் கோடி, தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்று இறைவனே நமக்கு வேண்டியவற்றைச் சரியான நேரத்தில் சரியான முறையில் கொடுப்பான் என்று உணர்த்துகின்றார்.

இரண்டாம் வகை வழிப்பாடானது பயன் கருதாமல் செய்கின்ற வழிபாடு. இதனை வடமொழியில் நிஷ்காமிய வழிபாடு என்பர். இவ்வழிபாடே போற்றுதலுக்குறியது; பின்பற்ற வேண்டியது. இதனைத் தான் உண்மை இறைநெறி வாழ்வினை வாழ்ந்து காட்டிய அறுபத்துமூன்று நாயன்மார்கள் நமக்குங் காட்டி இறைவனை அடைந்தார்கள். இதனையே 63 நாயன்மார்களின் வரலாற்றினைப் பாடிய தெய்வச் சேக்கிழார் தமது பெரியபுராணப் என்ற சைவப் பெட்டகத்தில், "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார், கூடும்

அன்பினில் கும்பிடவே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளக்கினார்" என்று உண்மை அடியார்கள் எதையும் எதிர்ப்பார்க்காமல் அன்பினால் மட்டும் இறைவனை வழிப்பட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்.

இறையருளைப் பெறுவதே வழிபாட்டின் நோக்கமாகவுள்ளது. அதற்கு அன்பு அடிப்படையாகிறது. இறைவனிடத்திலும் இறைவன் வாழ்கின்ற எல்லா உயிரிடத்திலும் அன்பு பாராட்டுதலுமே இறையருளை நமக்கு ஈட்டித் தருகின்றது. இதனைத் தெய்வப்புலவர் திருவள்ளுவர், "அன்புயீன் குழவி அருள்" என்று செம்மைபட இயம்புவார். உள்ளத்திலே அன்பு மேலிடவே அருளாளர்கள் உருகி-உருகி இறைவனை வழிப்பட்டிருக்கிறார்கள். இதனைத்தான் திருநாவுக்கரசு சுவாமிகள், "என் அன்பு ஆலிக்கும் ஆறு கண்டு இன்புற, இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்று குறிப்பிடுவார். அதாவது இறைவனிடத்திலே அன்பு ஏற்படுகின்ற வழியினைத் தாம் கண்டுகொண்டுவிட்டதினால் தமக்கு இனிப் பிறவியில்லை என்று உறுதியாகக் குறிப்பிடுகிறார். எனவே வழிபாடு என்று நாம் செய்கின்ற அனைத்துமே நாம் அகங்குழைந்து நம்மைப் பக்குவப் படுத்தி அவன் திருவருளைப் பெறுவதற்கு விழைவதுதான்.

இறைவனுக்குச் செய்கின்ற பூசனைகள், திருநீராட்டு, படைக்கப்படுகின்ற திருவமுது எதுவுமே இறைவனுக்குச் சென்று சேர்வதில்லை. எனவேதான், "சென்று அடையாத திருவுடையானை" என்று திருச்சிராப்பள்ளிப் பதிகத்தில் தமிழ்ஞானசம்பந்தர் குறிப்பிடுவார். பிறகு ஏன் இவற்றையெல்லாம் செய்கின்றோம் என்றால் நம் மனநிறைவிற்காகவும் இறைவன் செய்கின்ற கருணைக்கு எப்படிக் கைமாறு செய்வது என்று அறியாமலும்தான் இப்படிச் செய்கிறோம். இறைவன்குப் படைக்கின்ற அனைத்துமே அருள் தோய்ந்த புனிதப் பொருட்களாய் நமக்குத் திரும்பத் தரப்தபடுகின்றன. இவற்றின் வழி நம் உள்ளம் குளிர்ந்து நெகிழ்வுப் மன அமைதியும் ஏற்படுகின்றது. இறைவனிடத்திலே அன்பு ஏற்படுவதற்கு அவன் திருவருளையே அருளாளர்கள் வேண்டி நின்றுள்ளார்கள். இதனைத்தான் தீந்தமிழ்த் திருவாசகத்தின் சிவபுராணத்தில், "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று மணிவாசகர் குறிப்பிடுவார். எனவே வழிபாட்டின் வழி நாம் நம்மை அன்புடையவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அன்புக் கனியாய்க் கனிந்து மனத்தில் எக்குற்றமும் இல்லாதவர்களையே சிவமாம் தன்மையுடையவர்கள் என்றார்கள் நம் பெரியோர். இதனையே "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்று இடித்துரைப்பார் தமிழ் ஆகமம் பாடிய திருமூலர். இதனையே வள்ளுவப் பெருந்தகையும், "மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்து அறன்" என்று மனத்தில் குற்றமில்லாதவனே அறவாழ்க்கை என்கின்ற இறைவாழ்க்கையை அடைபவன் என்று புலப்படுத்துகின்றார். "இறவாத இன்ப அன்பு வேண்டும்" என்று இறைவனிடம் பேய்வடிவம் வேண்டிப் பெற்றக் காரைக்கால் அம்மையும் "ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்" என்று இறைவனிடம் வேண்டி நின்ற வள்ளல் பெருமானும் இதை நமக்கு உணர்த்துகின்றனர். இறைவனிடத்திலும் இறைவன் வாழ்கின்ற உயிர்களிடத்திலும் அன்பை வரவழைத்துக் கொள்வதே வழிபாட்டின் தலையாய நோக்கம் என்பதைக் கண்டோம். இப்படி இவ்வன்பை வரவழைத்துக் கொள்வதற்குச் சில நடைமுறைகளை நம் சித்தாந்த சைவம் வரையறுத்துள்ளது. இதனைச் சாதனங்கள் என்று குறிப்பிடுகின்றது. இந்நடைமுறைகள் என்ன என்பதை இனி காண்போம்.

Article – Vazhipaadu. Copyright (c) 2007 Malaysia Saiva Narpani Kalagam. All Rights Reserved.
http://www.saivanarpani.org

முதலில் திருநீறு, உருத்திராகம் அல்லது கணிகை மணி போன்ற சமயச் சின்னக்களை அணிதல் வேண்டும் என்கிறது. இறைவனைப் போற்றிப் புகழ்ந்து அகங்குழைய தமிழ் மந்திரங்களான திருமுறைகளை ஓத வேண்டும் என்கிறது. இறைவனின் தன்மையையும், உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் உலகத்திலிருந்து விடுபடும் முறையையும் அறிய சித்தாந்த சாத்திரங்களாக கற்க வேண்டும் என்கிறது. இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் உடலால் தொண்டுகள் செய்ய சரியையும் பூசனைகள் செய்ய கிரியையும் இறைவனை உள்ளத்தில் நிறுத்தி எண்ண யோகமும் இறைவனை அறிவார்த்தமாக உணர ஞானமும் ஆகிய நெறிகளில் நிற்க வேண்டும் என்கிறது. தவிர இறைவன் மீதும் அவன் வாழும் அடியார்கள் மீதும் பிற உயிர்கள் மீதும் அன்பு வளர அடியார் வணக்கமும் குருபூசைகளும் செய்தல் வேண்டும் என்கிறது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு காட்டாது மன்னுயிரைத் தன்னுயிர் போல் மதித்து உதவுதலை, மக்கள் தொண்டான மகேசன் தொண்டாய்ச் செய்யச் சொல்கிறது.

கற்பனைக்கு எட்டாத கடவளைக் கண்டு வழிப்பட்டு அன்பைப் பெருக்க ஆலய வழிப்பாட்டையும், திருத்தல பயணத்தையும், புனித நீராடலையும், திருவிழாக் காணலையும் வலியுறுத்துகின்றது. தவிர நின்றாலும், கிடந்தாலும் நடந்தாலும் அவன் பெயரைச் சொல்லிச் சுகங்காண, "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே" என்று திருஞானசம்பந்தப் பெருமான் கூறிய திருவைந்தெழுத்து மந்திரமான "நமசிவாய" என்கின்ற மந்திரத்தை நாவில் தழும்பேற சொல்லச் சொல்கிறது. வழிபாட்டிற்குள் இவ்வளவும் அடங்கியுள்ளது என்பதை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்த முற்படுவோமாக!

இன்பமே! எந்நாளும் துன்பமில்லை!

- திருச்சிற்றம்பலம் -

**திருமுறைச் செம்மல் திரு. ந.தர்மலிங்கம் எம்.ஏ அவர்கள்.**

Article – Vazhipaadu. Copyright (c) 2007 Malaysia Saiva Narpani Kalagam. All Rights Reserved.
http://www.saivanarpani.org